[2004 ஜூலை 27

35—

கால்நடை மருத்துவமனை

***20699—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொகுதி, முத்தணம்பாளையம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையைத் தங்கள் அனுமதியுடன் அவைமுன் வைக்கிறேன்.

இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த ஆண்டும் கேட்டிருந்தார்கள். முத்தணம்பாளையத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்தும், திருப்பூர் நகரில் இருந்தும் கால்நடைகளைச் சிகிச்சைக்காகக் கொண்டு செல்வதில் மக்களுக்குச் சிரமம் இருப்பதாக எங்களுக்கும் அடிக்கடி புகார்கள் வருகின்றன. முத்தணம்பாளையத்தில் இப்போதே 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருப்பதாக நேற்று இரவு கோவை மண்டல இணை இயக்குநர் அவர்களிடம் தொலைபேசியில் பேசியபோது எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவருடன் நடத்திய ஆலோசனையில் முத்தணம்பாளையத்தில் இருக்கும் கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தலாம் என்று இயக்குநர் பரிந்துரைத்தார். விரைவில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று முத்தணம்பாளையம் கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–30

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சிகரமான ஒரு நல்ல செய்தியைத் தெரிவித்து இருக்கின்றார். அவர் தொகுதிக்கு அருகிலே இந்த முத்தணம்பாளையம் அமைந்திருக்கின்ற காரணத்தினால் அந்த மருத்துவமனையை upgrade செய்வது விரைவாக

2004 ஜூலை 27]

நடைபெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பல்வேறு பகுதிகளில் மருத்துவமனை இல்லாத பகுதிகளில் mobile மருத்துவமனைகளை அதாவது நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்களை உருவாக்கவேண்டும். அதாவது, கால்நடையாகக் கால்நடைகள் காததூரம் நடந்து சென்று மருத்துவ வசதி தேடுவதற்குப் பதிலாக அந்தக் கால்நடைகள் இருக்கின்ற பகுதிக்கே சென்று மருத்துவ வசதி செய்கின்றவிதமாக நடமாடும் கால்நடை மருத்துவமனைகளை ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 2002 ஆம் ஆண்டு கேட்கப்பட்டதாகும். இதுசம்பந்தமாக நேற்று முழுவதும் அதிகாரிகளைக் கலந்து பேசி, இன்று திருத்திய பதிலைத் தெரிவித்தேன். நடமாடும் கால்நடை மருந்தகம் என்பது, மாவட்டம் முழுமைக்கும் பொதுவானதாகும். திருப்பூர் பகுதிக்கு நடமாடும் கால்நடை மருந்தகம் தேவையா என்பது குறித்துத் துறை அதிகாரிகளுடன் கலந்து பேசவேண்டும். அவசியம் என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டால், அரசின் நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலித்து, நிச்சயமாக மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்றுச் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை கிளை மருந்தகங்கள் கால்நடை மருத்துவ மனைகளாகத் தரம் உயர்த்தப்படும் என்ற மிக அருமையான திட்டத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியான விஷயம். அதே நேரத்திலே கடந்த கால ஆட்சியிலே ஏற்படுத்தப்பட்ட கிளை மருந்தகங்கள் பல இடங்களில் செயல்படுத்தப்படாமல் இருக்கின்றன; பொதுவாகவே அந்த இடங்களிலே அவை நடைமுறைப்படுத்தப் படாமலும் இருக்கின்றன. அதுபோன்று செயல்படாத கிளை மருந்தகங்களைத் தேவைப்படுகின்ற இடங்களுக்கு, மக்கள் கோருகின்ற இடங்களுக்கு, பொதுமக்களுடைய கோரிக்கையின் அடிப்படையிலே shift செய்வதற்கு, மாற்றித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா? அப்படி மாற்றித் தருகின்றபொழுது அதே கிளை மருந்தகத்தை, ஒரு தரம்

உயர்த்தப்பட்ட மருத்துவமனையாக மாற்றித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கிளை நிலையங்களைப் பற்றிய விவரங்களை நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லி, அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. ஆண்டிவேல்.

திரு. ப. ஆண்டிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியத்தில் புதுரோடு என்கிற கிராமத்தில் கால்நடை மருத்துவமனை நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2001 ஆம் ஆண்டு கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு மருத்துவர்கள் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சென்ற ஆண்டே நேரடியாக மனு கொடுத்துள்ளேன். இதுவரை மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆண்டிவேல், தனிக் கேள்வி போடுங்கள். அமைச்சர் அவர்கள் முத்தணம்பாளையத்தில் இருக்கிறார். நீங்கள் உங்கள் ஊருக்குக் கூப்பிடாதீர்கள்.

வினா எண் 36, திரு. கா.தி. இளையகண்ணு. மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

36—

சாலை வளைவுகளை அகலப்படுத்துதல்

***48535–திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) ஏற்காடு தொகுதியில் ஆற்றுப்பாலத்திலிருந்து மாரமங்கலம் வரையுள்ள hair-pin வளைவுகளை (1, 3, 5, 19 மற்றும் 21) அகலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS